# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.03.2023 – 31.03.2023 தீபம் 10


## சிறப்பாக இடம்பெற்ற நூற்றாண்டு மெய்வல்லுனர் போட்டி

~யாழ் அரசஅதிபர் பிரதமவிருந்தினராக சிறப்பித்தார்~




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு காலத்தை சிறப்பிக்கும் முகமாக 16.03.2023 அன்று பிற்பகல் 2 மணியளவில் இல்ல மெய்வல்லுனர்போட்டி நிகழ்வானது அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலாலர் திரு அ.சிவபாலசுந்தரன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக கலாசாலை முன்னைநாள் அதிபர் சிவயோகநாயகி இராமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

### தமிழகத்தின் பிரபல பேச்சாளர் திருமதி கவிதா ஜவகர் ஆசிரியம் பற்றிச் சிறப்புரையாற்றினார்



தமிழகத்தின் (சண் மற்றும் விஜய் தொலைக் காட்சிகளின்) பிரபல பேச்சாளர் திருமதி கவிதா ஜவகர் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 15.03.2023 அன்று விஜயம் செய்து ஆசிரிய பயிற்சி பெறும் பயிலுநர்களிடையே ஆசிரியம் குறித்து உரையாற்றினார்.

### ஆசிரியர்களின் தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்தல் தொடர்பான சிறப்புரை. திருமதி சுவர்ணா நவரத்தினம் அவர்கள்



கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் இசுருபாய கல்வி அமைச்சின் முன்னாள் பணிப்பாளருமாகிய திருமதி சுவர்ணா நவரத்தினம் அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர்களின் தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்வது தொடர்பாக உரையாற்றினார்.

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை
தொலைபேசி: 0212230323

# திருவள்ளுவர் நாள் மற்றும் மகளிர் நாள் என்பன கலாசாலையில் ஒரேதினத்தில் அனுட்டிப்பு



திருவள்ளுவர் நாள் மற்றும் உலக மகளிர் நாள் என்பன கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 08.03.2023 காலை ஒரேதினத்தில் அனுட்டிக்கப்பட்டன. கலாசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மாசி உத்தர நாளில் இடம்பெறும் திருவள்ளுவர் குருபூசையை அனுட்டிக்கும் வகையில் மலர் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், மற்றும் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் என அனைவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற அரங்க நிகழ்வுகளில் **“வள்ளுவரும் பெண்மையும்”** என்ற பொருளில் திரு.இரா.செல்வவடிவேலும் உரையாற்றினர். **“பிள்ளைகளை மையப்படுத்திய கல்வியும் பெண்களும்”** என்ற பொருளில் கலாசாலை விரிவுரையாளர் பிரபாலினி தனமும் **“வள்ளுவம் தந்த வள்ளுவர்”** என்ற பொருளில் தமிழ் சிறப்பு நெறி ஆசிரிய மாணவி எம். ஏ. சமீனாவும் உரையாற்றினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தினமும் காலைப் பிரார்த்தனையின்போது திருவள்ளுவரின் குறட்பாக்கள் கீர்த்தனை வடிவில் இசைக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கலாதீபம்

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

இலங்கையின் பொருளாதார எழுச்சி என்பது முயற்கொம்பாகவே இருக்கின்றது.

கல்வியின் மிகப் பெரும் செலவினமாக அமைவது கல்விசார் மனித வளத்தின் சம்பளம் ஆகும். ஆசிரியர்கள் முதல் உயர் ஆளணியினர் வரை தமது சம்பளத்தில் திருப்தியுறாத நிலைமையே இன்று காணப்படுகிறது. சாதாரண ஆசிரியர் ஒருவர் மாதம் ஒன்றிற்கு ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் சம்பளமாக பெறும் நிலைமையே காணப்படுகிறது. குடும்பத் தலைவராக இருக்கும் ஒருவருக்கு இந்தத் தொகை போதுமானதல்ல. இதற்கு அப்பால் கல்விசார் அபிவிருத்தி பணிகளுக்கு அரச உதவி கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கவே முடியாத நிலைமை காணப்படுகிறது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை பொறுத்தவரையில் பல்வேறு அபிவிருத்தி திட்ட பணிகளுக்காக கல்வி அமைச்சிடம் நிதி உதவிக்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித சாதகமான பதில்களும் சாத்தியப்படாமை துரதிஷ்டவசமான தாகும். இந்த இடத்தில்தான் கல்வி மீது அக்கறை கொண்ட கொடையாளர்களின் உதவி கல்விக்கு பெருந்துணையாக அமையும். கலாசாலை நடவடிக்கையின் மீது ஆர்வம் கொண்ட கல்வி கொடையாளர்கள் உற்ற தருணத்தில் கைகொடுப்பது பெரும் உதவியாக அமையும். நம்பிக்கை தரும் வகையில் ஒரு சிலர் உதவிகளை வழங்க முன்வருகின்றார்கள் இவை பலப்பட வேண்டும் கல்வி பாரம்பரியத்தை கட்டி எழுப்புவதில் நமது சமூகத்தினர் கை கொடுத்து உதவ வேண்டும்.

## முன்னாள் பிரதி அதிபர் செ.செந்தில்மணி அவர்கள் இறைபதம் அடைந்தார்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் செ.செந்தில்மணி அவர்கள் 15.03.2023 அன்று தனது 70வது வயதில் இறைபதம் அடைந்தார். 1994ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டுவரை கலாசாலையில் பணியாற்றிய இவர் கணிதம், கல்வி உளவியல் போன்ற பாடங்களைப் போதித்தார்.

அவரது ஆன்மா சாந்தி அடைய கலாசாலையில் கோயில் கொண்டருளும் யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வர பெருமானை பிரார்த்திக்கிறோம்.

## உலக நீர் தினம்
## விசேட உரை – எந்திரி ச.சர்வராஜா



22.03.2023 - உலக நீர் தினம் பற்றிய விசேட உரையினை திரு ச.சர்வராஜா நீர்ப்பாசன பொறியியலாளர், (தலைமை அலுவலகம் வடமாகாணம்) ***“யாழ்ப்பாணத்தில் தண்ணீர் நெருக்கடியை வெற்றிகொள்வது எப்படி?”*** எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். பொறியியலாளர் தனது தேர்ந்த அனுபவத்தை பலரும் பயனுறும் வகையில் வெளிப்படுத்தினார்.

அத்துடன்

கலாசாலை மாணவர்கள் நடித்த குறும்பட காட்சியும் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் அவர்களின் உரையும், திருமதி தேன்மொழியின் மாணவர் உரையும் இடம்பெற்றன.

# News in Brief – Month of March

**01.03.2023**

**Wednessday Assembly** - Mrs. Suvarna Navaratnam, former lecturer of the Kopay Teachers' College and former Director of the Ministry of Education Issurupaya attended the event and delivered keynote address on the ***Development of Leadership Qualities of Teachers***. On behalf of the lecturers, Ms. Sujeeva Arullingam spoke about the ***strategies for the Personality Development of the Teachers***. This programme was presented by the teacher students of 1st year English course. It is noteworthy that all the events were conducted through English Language.

**03.03.2023**

On Friday morning at 6 am, road race was held for the teacher students of Kopay Teachers' College. Former Principal Mr.V.K. Kanapathipillai was the chief guest in the road race. Jaffna National College of Education president Mr. S. Paramananantham, College Former Principal Mr V. Karunalingam, Lion Dr. V. Theyagarajah and former lecturer Mr V.S.Gunaseelan were participated as special guests. College lecturers, non - academic staffs participated in the occasion.

**08.03.2023**

**Wednessday Assembly - The Thiruvalluvar Memorial Day (Guru Pooja)** and **International Women's Day** were observed at the Kopay Teachers' College. Mr R.Selvavadivel, President Jaffna Tamil Sangam delivered keynote address. Our lecturer Mrs Prabalini Thanam and Tamil course teacher student Mrs M.A.Sameena delivered speeches about ***Child Centered Education and Women,*** and ***Valluvar - Valluvam.*** The event s occurred with the arrangement of Physical Education A teacher students.

**15.03.2023**

**Wednessday Assembly -** Famous orator of Tamil Nadu, Mrs. Kavitha Javakar visited Kopay Teachers' College and delivered an Immersed speech.

**15.03.2023**

The former deputy principal of Kopay Teachers' College Mr S. Senthilmany passed away today morning.
May his soul rest in the feet of Almighty God Yogalingeswara Swamy of our Teachers' College.

**16.03.2023**

Kopay Teachers' College Annual Inter House Athletic Meet was held on Thursday at 2pm Mr A.Sivabalasundean (G.A Jaffna) Participated Chief Guest and Ret. Principal Chevalier Mrs Sivayoganayaki Ramanathan Participated Special Guest.

**22.03.2023**

**Wednessday Assembly - *World Water Day*** Keynote address Engineer Mr S. Sarvarajah - Irrigation Engineer Northern Province. Lecturer's Speech Deputy Principal Mr K.Senthilkumaran and ***Short Film Screened by College Students.*** Teacher student Speech Mrs. Thenmozhi Pri 2nd year. This programme was presented by the teacher students of 2nd year Primary course.

**29.03.2023**

**Wednessday Assembly - World Theater Day Festival - 27.03.2023**

Mr K.R Kamalanathan emeritus lecturer (JNCoE) gave the Keynote address. Mrs. Chandrika Tharmaratnam delivered the lecturer speech Mrs. T.Emilda Usha 2nd year English teacher student delivered student speech. This programme was presented by the teacher students of 2nd year English course.

**Iftar programme**

Iftar programme was started on 29.03.2023 evening at 5.15 pm the Special guests Muthu Mohammad Nifahir – Former Jaffna Municipal Council Member and Ashek Moulavy
Muhammad Raleem - Chief Imam Periyakadai Jumma Mosque. This programme was presented by teacher students of the Islamic Union.

**31.03.2023**

**Workshop** - the hearing measurement for the students for Special Education teacher students of KTC and JNCoE students.

# கலாசாலை நிகழ்வுகளின் அனுபவ உரைகள்



**கலாசாலையின் நூற்றாண்டு விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ் மாவட்ட அரச அதிபர் திரு அ.சிவபாதசுந்தரன் அவர்கள் ஆற்றிய உரை**

ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்கள் எல்லாவகைத் திறமைகளையும் பெற்றிருப்பது கலாசாலைக்கு பெருமை. ஆசிரியர்களது தராதரம் என்ன பங்கு, பெருந்தன்மை இவைதான் இன்றைய தலைமுறையின் பிரதிபலிப்பாக இருக்கிறது ஒரு ஆசிரியர் எப்போதும் ஒரு role model ஆக இருப்பார். எனக்கு ஆங்கிலம் கற்பித்த சிவலிங்கம் ஆசிரியர் மீதான பக்தி விருப்பம் எங்களை விருப்பத்தோடு ஆங்கிலம் கற்பிக்க வைத்தது. நேர்மறை எண்ணங்களை அவர் எம்முடன் ஏற்படுத்தியதால் இன்றைய பொருளாதார சிக்கல்கள் மிக்க சூழலில் துவாரம் விழுந்த ஒரு தோணியிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கின்ற நிலையில் இதைக் கடந்து எவ்வாறு கரைசேர போகிறோம் என்கின்ற சிந்தனை இருக்கும்போது நேர்மறை சிந்தனை மிக்க ஆசிரியர்கள் இருந்தால் இந்த நாடு முயற்சி பெறும். ஆசிரியர்களின் சிந்தனை அவர்களது உருவத்திலும் பிரதிபலிக்க வேண்டும் இதற்கு நாம் வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர் குணபாலசிங்கம் அவர்கள் உதாரணமாக விளங்கினார். நெடுந்தீவில் இருந்து வந்து இக்கல்லூரியின் விடுதியில் இருந்து கற்ற செல்வநாயகம் மீது அவர் காட்டிய அக்கறை இதற்கு சான்றாகும்.

ஒவ்வொரு தனிப்பட்ட மாணவர்களின் மீதும் அக்கரை செலுத்தும் ஆசிரியர்களால்தான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆசிரியர் தொழில் என்பது எங்களையே சமூகத்திற்கு கொடுத்து அந்த சமுதாயத்தை மேலே கொண்டு வருவதற்கான ஒரு புனிதமான தொழில் அதற்கேற்ற தகவல்களை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்க வேண்டும். சுயஒழுக்கமும் சுயகட்டுப்பாடும் ஆசிரியர்களுக்கு அவசியம் அரசஅதிபர், உதவியரசஅதிபர் தொழிலில் நாம் உருவாக்கி விட்டவர் உங்களை மறந்து போகலாம் ஆனால் தொழில் அவ்வாறானது அல்ல என்றோ எமக்கு கற்பித்த ஆசிரியர்களை அதிபர்களையும் நினைவில் வைத்து போற்றத்தக்க புனிதமான தொழிலாக ஆசிரியர் தொழிலே அமைகின்றது.

அந்தப் புனிதத்தையும் பெருமையையும் வாழ்நாள் முழுக்க சொல்ல வேண்டும் இதற்குரிய மரியாதையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் உங்கள் கையில் தரப்பட்டுள்ள வெறும் பச்சைத் தண்ணீரை என்ன நிறமாக மாற்றப் போகின்றீர்கள் என்று நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். மக்கள் சேவை மகேசன் சேவை என்பார் அந்த மக்களையே உருவாக்கும் மகத்துவமான சேவை ஆசிரிய சேவை ஆசிரியர்களாகிய நீங்களே சாதி மத பேதம் பார்ப்பவராக இருக்கக் கூடாது எல்லோரையும் சமமாக ஏற்க வேண்டும் அத்துடன் பகிர்ந்து உண்ணுதல் என்ற பண்பினையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.



**சிறப்பு விருந்தினர் உரை**

1951 ஆம் ஆண்டு நான் பிறந்தது. 1937 ஆம் ஆண்டு எனது சகோதரி இங்கே விரிவுரையாளராக கடமை யாற்ற தொடங்கினார்.

அவர்தான் எனக்கு படிப்பித்தது. அவர் இருக்கிற பொழுது விடுதியில் தான் இருந்தவர். அதனாலே இந்த மண்ணில் நான் காலடி எடுத்து வைத்தது. அதன் பிறகு மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை படித்துக் கொண்டிருந்தேன். மேற்படிப்புக்காக இந்தியாவிற்கு சென்றேன். இங்கே விரிவுரையாளராக 1967ஆம் ஆண்டு கடமையை ஆரம்பித்தேன். பிறகு 1972ஆம் ஆண்டு அழுத்கம ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு இடமாற்றம் பெற்று சென்றேன். ஒரு வருடத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு பதவி உயர்வுடன் அனுப்பி வைத்தனர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் கடமை ஆற்றிக் கொண்டிருந்தபோது 1975 ஆம் ஆண்டு பிரான்சிக்கு புலமைப் பரிசில் பெற்று இரண்டு வருடம் அங்கிருந்து படித்தேன். மீண்டும் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு திரும்பி வந்தேன். மீண்டும் இரண்டு கிழமைகளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வந்தேன். அன்று தொடங்கி 1991 ஆம் ஆண்டு வரை விரிவுரையாளராக, பிரதி அதிபராக, அதிபராக நான் கடமையாற்றினேன். அந்த சமயத்தில் திருமதி ஆனந்தசுவாமி அவர்கள் அதிபராக இருந்தார்கள். அதிபர் என்னை சிவா என்று அழைப்பார்.

நான் இன்றைய விளையாட்டுப் போட்டியை அவதானித்தபோது எனக்கு கவலையாக இருந்தது. மிகக் குறைவான ஆசிரிய மாணவர்களைக் கொண்டதாக காணப்படுகின்றது அந்நேரத்தில் அதிக தொகை கொண்ட ஆசிரிய மாணவர்கள் காணப்பட்டார்கள். தற்சமயம் எனக்கு அச்சமயத்தில் என்னை விட வயது முதிர்ந்தவர்களுக்கு தான் நான் கற்றுக் கொடுத்தேன் அவர்கள் திருமணம் முடித்து பிள்ளைகள் உள்ளவர்கள். அவர்கள் விடுதியில் தான் இருந்தனர் அவர்களும் விளையாட்டுப் போட்டியில் திறமையானவர்களாக தான் இருந்தனர் இவ்வாறாக விளையாட்டுப் போட்டியில் மூலமாகத்தான் தங்களுடைய பாடசாலையிலும் மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்த கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் விளையாட்டுப் போட்டியானது குறைவான ஆசிரிய மாணவர்களைக் கொண்டாலும் நிறைவாக இடம் பெற்றது. நீங்கள் கற்பிக்க இருக்கின்றவர்கள் சீரிய பிள்ளைகள் அது உங்களுடைய பிள்ளைகள் என்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் ஆசிரியர் என்றால் பயம் மரியாதை காணப்பட்டது ஆனால் இந்தக் காலத்தில் அவ்வாறு இல்லை ஆசிரிய மாணவர்களை தண்டிக்க முடியாது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கூற வேண்டும்.

ஆசிரியர்களுடன் மரியாதை உடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இதனைக் கேட்கின்ற ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறப்பாக கற்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இச்சந்தர்ப்பத்தை தந்தவர்களுக்கு நன்றி கூறிவிடை பெறுகின்றேன்.

# கலாசாலையில் இப்தார் நிகழ்ச்சி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின், இஸ்லாமிய மஜ்லிஸ் முன்னெடுத்த இப்தார் நிகழ்ச்சி 29.03.2023 புதன்கிழமை மாலை 5.15 மணியளவில் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கணிதநெறி ஆசிரிய மாணவன் ஜனாப் எஸ்.எச்.எம் மாகிர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலாசாலையின் அதிபர் திரு.ச.லலீசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் திரு.முத்து முகமது நிபாகிர் அவர்கள் இஸ்லாமியர்களின் கடமைகள் குறித்து உரையாற்றினார். தொடர்ந்து யாழ்ப்பாணம் பெரியகடை ஜும்மா பள்ளிவாசலின் பிரதம இமாம் அஷ்ஷெய்க் மௌலவி முகம்மத் ரலீன் அவர்கள் சிறப்புரையாற்றினார். நோன்பு உணர்த்தும் நெறிமுறை என்ற தலைப்பில் அவரது உரை அமைந்திருந்தது.இடையிடையே ஆசிரிய மாணவர்கள் வழங்கிய இஸ்லாமிய கீதங்கள் மற்றும் உரைகள் என்பன இடம்பெற்றன. நிறைவாக அதான் ஒலித்ததை தொடர்ந்து இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளை ஆங்கில பாடநெறி ஆசிரிய மாணவன் எஸ்.எம்.ஹுமாம் அவர்கள் தொகுத்து வழங்கியிருந்தார். விரிவுரையாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், ஆசிரிய மாணவதலைவர்கள், இஸ்லாமிய ஆசிரியமாணவர்கள் எனப் பலரும் பங்கேற்று சிறப்பித்தனர்.







# உலக நாடகவிழா 27.03.2023



உலக நாடக விழாவினை முன்னிட்டு கலாசாலையிலும் சிறப்பு நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது. அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர் உரையினை க.இ.கமலநாதன் ஓய்வுநிலை விரிவுரையாளர் (யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி) அவர்கள் ஆற்றினார். அத்துடன் கலாசாலையின் நூலகத்திற்கென தன்னால் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பாக அதிபரிடம் கையளித்தார்

## விசேடகல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கேட்டல் அளவீடு தொடர்பான செயலமர்வு 31.03.2023

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விசேட கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கேட்டல் அளவீடு தொடர்பான செயலமர்வினை யாழ்ப்பாணம் (Vision Care) பார்வை பராமரிப்பு நிறுவனத்தினர் நடாத்தினர். பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் தலைமையில் ஆரம்பமாகிய இச்செயலமர்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுடன் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்விநெறி மாணவ ஆசிரியர்களும் கலந்து பயன் பெற்றுக்கொண்டனர்.
வளவாளர்களாக ( Vision Care ) பார்வை பராமரிப்பு யாழ் பிராந்திய முகாமையாளர். செல்வி.சதுரி வனிகசேகர அவர்களும் கேள் அளவையிலாளர் செல்வி.பிரியங்கா ராகவன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**தொகுப்பு – எம்.ஐ.எவ் சப்னா**

விசேடகல்வி ஆசிரிய மாணவி (2023/2024)



# மாறிவரும் குடும்ப வகிபாகமும் சமூகத்தில் அதனது தாக்கமும்



**திருமதி பிரபாளினி தனம்**
விரிவுரையாளர்(SLTES)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் தங்கள் நாடுகளில் அல்லது சமூகங்களின் வரலாற்றிலே அசாதாரணமான பங்கை ஆற்றிய சாதாரண பெண்களின் தைரியம் மற்றும் உறுதியான செயல்களைக் கொண்டாடுவதற்கும், மாற்றத்திற்கான அழைப்பு விடுவதற்கும், செய்த முன்னேற்றத்தைப் பற்றி சிந்திப்பதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகின்றது. அந்த வகையில் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து 21 ஆம் நூற்றாண்டாகிய இன்று வரை பால்நிலை சமத்துவத்திற்காக போராடி, வெற்றி பெற்று பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் வெவ்வேறு வகிபாகங்களை ஏற்று சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்கள். பெண்கள் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்பு மட்டுமல்ல சமூகத்தினதும், கலாச்சாரத்தினதும் முதுகெழும்பாகவும் திகழ்கின்றார்கள். குடும்பம் என்ற மிகச்சிறிய அலகு ஒன்றிணைந்தே சமூகம் என்கின்ற மிகப்பெரிய கட்டுமாணத்தை உருவாக்குகின்றது. இந்த குடும்பம் என்ற நிறுவனத்தில் பெண்ணின் வகிபாகம் காத்திரமான இடத்தை வகிக்கின்றது. இந்தக் கட்டுரையானது பெண்ணை மையமாகக் கொண்டு மாறி வரும் குடும்ப வகிபாகமும் சமூகத்தில் அதனது தாக்கமும் பற்றிய கருத்துக்களின் தொகுப்பாகவே காணப்படுகின்றது.

குடும்பம் எனும் பதத்தை வரைவிலக்கணம் செய்ய முற்பட்ட **மோர்டொக் (1949)** - "குடும்பமானது பொதுவதிவிடம், பொருளியற் கூட்டுறவு மற்றும் இனப்பெருக்கத்தினால் குறித்துக் காட்டப்படும் ஒரு சமூகக் குழுமமாகும்" என்கிறார் **பிறேசர். (1989)** - "ஒருவர் மற்றையவருடனும் சமூகத்துடனும் ஒரு சிக்கலான உறவில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேறுபட்ட ஆர்வங்களையும் கரிசனைகளையும் கொண்ட தனி நபர்களின் கூட்டம்"என்கிறார். பிள்ளைகளின் வாழ்வில் குடும்பமானது மிக முக்கியமான நிறுவனமாக இருப்பது ஏன் என பார்த்தோமானால் குடும்பமானது பிள்ளைகளது மனவெழுச்சி மற்றும் உளவியல் பராமரிப்பையும் அவர்களது நல்வாழ்விற்கு மிக அத்தியாவசியமான வாழ்வாதாரத்தையும் அனுபவிக்கும் இடமாக விளங்குவதனால் ஆகும். குடும்பங்கள் பொதுவாக உணவு, உறைவிடம், நெருக்கத்திற்கான மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் உறுப்பினர்களுக்கு பொருளியல், உடலியல் சார்ந்து அடுத்த தலைமுறைக்கு மரபுகளையும் கலாச்சாரத்தையும் எடுத்தச்செல்வதும் கடத்துவதுமாகும்.

இதனால் தான் குடும்பத்தின் மரபு ரீதியான வகிபாகம் என பார்த்தோமானால் ஒரு மரபு ரீதியான சாதாரண குடும்பம் - ஒரு பார்த்துக் கொள்ளும் தாய், உழைக்கும் தந்தை மற்றும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டுள்ளது.

குடும்பத்தின் மாறி வரும் வகிபாகத்திற்கு பிரதான காரணம் என்ன? பலமான பொருளியல் விசைகள். 18ஆம் நூற்றாண்டின் கைத்தொழிற் புரட்சி - இதனைத் தொடர்ந்து நகரப் புறங்களுக்கு இடமாறிச் சென்ற புவியியல் அசைவு. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மேற்கததேய திருமணமான பெண்கள் வேலைக்குச் செல்லல். இவை கூட்டுக்குடும்பத்தைப் பிரித்து கருக் குடும்பத்தின் தோற்றுவாய்க்கு வித்திட்டது. கருக் குடும்பம் என்பதற்கான வரைவிலக்கணத்தைப் பார்த்தோமானால் - ஒரு குடும்பத்தின் அருகிலே உறவினர்களைக் கொண்டிராத ஒரு கணவன் மனைவி மற்றம் அவர்களுடைய சொந்தப் பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குடும்பமாகும்.

கருக்குடும்ப தோற்றத்திற்கான காரணிகள் எனப் பார்த்தோமானால். புதிய தொழில் வாய்ப்புக்கள், மேம்படுத்தப்பட்ட உயர் கல்வி வாய்ப்புக்கள், இளம் குடும்பங்களைக் கவரும் நவீன வசதிகளுடனான வீட்டுத்திட்டங்கள், கருக்குடும்ப அங்கத்தவர்களுக்கான நலன்புரி வசதிகள், குடும்ப கட்டுப்பாட்டு முறைகளுக்கான இலகுவான அணுகுமுறைகள். பெண்கள் வேலைக்குச் செல்வதில் காட்டும் ஆர்வமும் தேவையும் அவற்றில் சிலவாகும். கருக் குடும்பமொன்றின் பிரதான குணாதிசயங்கள் என்னும் போது தனிப்பட்ட தன்மை, கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான நெருங்கிய மனவெழுச்சிப் பிணைப்புப் பற்றிய கருதுகோள், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் குடும்ப அங்கத்தவரிடமிருந்தும் அதிகரிக்கப்பபட்ட சுதந்திரத்துடனான பெற்றோர்களும் அவர்களது பிள்ளைகளும். கருக்குடும்பத்தின் தோற்றத்தைத் தொடர்ந்து குடும்ப வாழ்க்கையில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு பல சமூகமாற்றங்கள் ஏற்படத்தொடங்கியது. சில மாற்றங்கள் அவசியமானதும் பெண்களுக்கு நன்மை பயப்பதாகவும் இருந்தது என்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. இருப்பினும் தற்காலத்தில் சமூகரீதியாக ஏற்பட்ட மாற்றங்களில் எதிர் விளைவுகளை ஏற்படுத்திய மாற்றங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. வேலைக்குச் செல்லும் தாய்மார்.
2. ஒற்றைப் பெற்றோர்கள்.
3. குடும்பத்திற்குள்ளான மாறிவரும் பால் நிலை வகிபாகங்கள்.
4. சிறுவர் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்குமான ஆதரவு.

இவை தனித்தனி மாற்றங்களாக இருந்த போதும் இவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பிருப்பதனை மறுக்க முடியாது. வேலைக்குச் செல்லும் தாய்மார் குடும்ப பாராமரிப்புக்குத் தேவையான வகிபாகங்களுடன் வேலைத்தளத்திற்கான மேலதிக வகிபாகங்களையும்வகிக்க வேண்டியவர்களாகின்றனர்.

இதனால் வேலைச்சுமை, மனஅழுத்தம், உளநெருக்கீடு போன்றவற்றிற்கு முகம் கொடுப்பதோடு பொருளாதார ரீதியாகவும், குடும்ப முகாமைத்துவம் தொடர்பாகவும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இதனால் இவர்களது பாராமரிப்பில் உள்ள பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக வேலைக்குச் செல்லாத தாய்மாரின் பராமரிப்பில் உள்ள பிள்ளைகளை விட வேலைக்குச்செல்லும் தாய்மாரின் பராமரிப்பில் உள்ள பிள்ளைகள் அதிகம் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. போசனைக் குறைபாடு, தனிமை, மனஅழுத்தம், பராமரிப்பின்மை அல்லது குறைவு, கலாச்சார விழுமியம் தொடர்பான நெறிப்படுத்தலின்மை, பாதுகாப்பின்மை, கணிப்பின்மை, ஆதரவின்மை, அன்பின்மை போன்ற காரணிகளால் இவர்களில் பெரும்பான்மையினர் தற்கொலை, மதுப்பழக்கம், போதைப்பொருள் பாவனை, வன்முறை, முரண்பாடு, சுதந்திரமான பாலியல் தொடர்பு போன்ற சமூகச் சீர்கேடுகளுக்கு உட்படுகின்ற வீதம் அதிகரிக்கின்றது.

அடுத்து ஒற்றைப் பெற்றோரை எடுத்துக் கொண்டோமானால், இலங்கை போன்ற நாடுகளில் யுத்தம், வீதி விபத்து, நோய்காரணமாக ஒற்றைப்பெற்றோரைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளமையை அறியமுடியும் ஆனால் அண்மைக்காலங்களில் மேலைத்தேசத்தவருக்கு நிகராக எமது நாடுகளிலும் 18, 19 வயதினரைக் கொண்ட அல்லது அதனிலும் குறைந்த வயதைக் கொண்ட தாய்மாரைத் தலைமைத்துவமாகக் கொண்ட ஒற்றைப்பெற்றோர் தொகை அதிகரித்து வருகின்றது.

கருக்குடும்ப அதிகரிப்பு, விவாகரத்து அதிகரிப்பு, பெற்றோர்இடம்பெயர்தல்,பெற்றோர்களுக்கிடையிலான மோதல் மற்றும் திருமணமாகாத பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் . ஒரு தார திருமண உடைவு போன்ற போக்குகளால் கீழைத்தேசங்கலிலும் ஒரு பெற்றோர் குடும்பங்கள் அதிகரித்து வருகின்றன. அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பாவில் இடம்பெற்ற முந்தைய ஆய்வுகளில் ஒரு பெற்றோர் குடும்பத்தில் வளர்வது குழந்தையின் ஆரோக்கியம், அறிவாற்றல் வளர்ச்சி மற்றும் உளவியல் நல்வாழ்வு, குறைந்த சுயமரியாதை போன்ற பல்வேறு குறுகிய கால நீண்டகால விளைவுகளுக்கு உட்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி சிசுக்கொலை, தற்கொலை, பாலியல் ரீதியான துன்புறுத்தல், வறுமை, வீடின்மை, வேலைக்கான தகுதியின்மை மற்றும் பக்குவமின்மை போன்ற பல்வேறு துன்பங்களுக்கு பதின்ம வயது தாய்மாரும் அவர்களது பிள்ளைகளும் உட்படுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்கு விதிவிலக்கான உடல், உள மற்றும் சமூக ஆரோக்கியமுள்ள பிள்ளைகளும் உருவாகின்றார்கள் என்பது மறுப்பதற்கில்லை. இருந்தபோதும் நல்ல பயிரிடையே ஒரு களை உருவானால் மொத்த விளைச்சலையும் அது பாதிக்கும். இது போன்றே இன்று சமூகத்தில் ஏற்படுகின்ற அனைத்து சமூகச் சீர்கேடுகளுக்கும் இத்தகைய பிண்ணனிகள் இருப்பதனை நாம் மறுக்க முடியாது.

வேலைக்குச் செல்லும் தாய்மார், ஒற்றைப் பெற்றோர் இதன்காரணமாக குடும்பத்தில் மாறி வரும் பால்நிலை வகிபாகம் என்று பார்த்தோமானால்: தந்தைமார் பிள்ளைகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் முன்வருகின்றார்கள். இது ஒரு ஆரோக்கியமான பால்நிலை சமத்துவத்தை வெளிக்காட்டுகின்றது. இருப்பினும் தாயைப் போன்று தந்தையால் பிள்ளையை பராமரிக்க முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. இதனால் பிள்ளைகளுக்கு கிடைக்கவேண்டிய அன்பு, கண்டிப்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பன முழுமையாகக் கிடைக்க முடிவதில்லை. இதனால் மேலதிக ஆதரவிற்கான தேவை பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படுகின்றது. இந்நிலையில் இன்று நடைமுறையிலிருக்கும் ஏற்பாடுகள் என்று பார்த்தோமானால்

- பகல் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள்.
- நிறுவன ரீதியான பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள். காணப்படுகின்றன.

அதிலும் பகல் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களின் வேறுபட்ட வகைகள் உண்டு. எமது நாட்டில் பகல் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களாக சில முன்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. பகல் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் அமைய வேண்டிய நியமங்கள், தரமான பகல் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களிருந்து பிள்ளைகள் பெறும் நன்மைகள். இந்நிலையங்களில் வேலை செய்பவர்கள் பெற்றிருக்க வேண்டிய பயிற்சிகள், இந்நிலையங்களிற்கான உரிமம் தொடர்பான விழிப்புணர்வு மேலைத் தேச நாடுகள் போன்று எமது நாடுகளில் பெரிதளவில் ஏற்பட வில்லை என்றே குறிப்பிடவேண்டும். அதுமட்டுமன்றி நிறுவன ரீதியான பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் வளரும் பிள்ளைகள் இரு பெற்றோருடன் இணைந்து வளரும் பிள்ளைகளைக் காட்டிலும் உடல், உள ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகுவதாகவும், மனவிரக்திக்கு உட்படுவதாகவும், காழ்ப்புணர்வு உடையவர்களாகவும், தாழ்வுச்சிக்கலுக்கு உட்பட்டவர்களாகவும் திகழ்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த ஆய்வுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பல தீர்வுகளில் ஒன்றே பிள்ளைமையக் கல்வியாகும். பிள்ளைகளின் நலனோம்புச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தி, அவர்களின் தேவைகள், அன்பு , கணிப்பு என்பவற்றை முன்னிறுத்தி கற்றலை முன்னெடுப்பதாக இப்பிள்ளைமையக் கல்வி அமைகின்றது.

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல்



திருமதி M.A சமீனா
தமிழ்நெறி ஆசிரிய மாணவி
(2021/2022)

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் ஒப்பரிய நீதிநூலாம் திருக்குறளைத் தந்த தெய்வப் புலவராக திருவள்ளுவர் போற்றப்படுகிறரர். அவரது குரு பூசை தினம் ஒவ்வொரு ஆண்டும் மாசி திங்கள் உத்தர நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகிறது. எமது கலாசாலையைப் பொறுத்தவரை திருவள்ளுவருக்கு சிலை அமைத்துப் போற்றுவதுடன் அன்றாட கற்றல் கடமைகளை திருக்குறள் வாழ்த்தை கடவுள் வாழ்த்தாக இசைத்து தொடங்குகின்ற தனித்துவ மரபு காணப்படுகிறது.இன்று சர்வதேச மகளிர் தினமும் கூட அவ்வகையில் மதங்கடந்த திருக்குறளைத் தந்த வள்ளுவர் தம் பெருமை தன்னை ஒரு பெண்ணாக உங்கள் முன் இயம்புவதையிட்டு அகமகிழ்கிறேன் இவ்வாய்ப்பை எனக்களித்த கலாசாலையின் அதிபருக்கும் வழிப்படுத்தி தமிழ்பாட விரிவுரையாளருக்கும் நன்றி

“ வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடு” என்றார் பாரதியார்.வள்ளுவனின் வரலாற்றை ஆராயும் போது பல வரலாற்றுச் சர்ச்சைகள் இருப்பதையும் காணமுடிகிறது.வள்ளுவர் பிறந்த இடம் மயிலாப்பூர் என்கிறார்கள்.அவரது தாய்,தந்தை பெயர்தான் ‘ஆதி பகவன்’ என்கிறார்கள் அவரது பிறப்பை வைத்து திருவள்ளுவர் ஆண்டென ஒன்று கணிக்கப்பட்டாலும் அவர் வாழ்ந்த காலப்பகுதியை அறுதியிட்டுக் கூறுவதிலும் சில சங்கடங்கள் உள்ளன. “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” என்றார் பாரதிதாசன் எது எப்படியோ தமிழன்னை உலகிற்கு தந்த ஒப்பரிய சிந்தனையாளர், புலமையாளர் தீர்க்கதரிசி வள்ளுவர் என்று கூறினால் அது மிகையாகாது. வள்ளுவர் சிந்தனை என்பது இன, மத,சாதி பேத எல்லைகளைத் தாண்டிய மனிதாபிமான சிந்தனையைக் கொண்டது.காலதேச வர்த்தமானங்களைக் கடந்தது.இதனால்தான் உலகில் அது அதிக மொழி பெயர்ப்புக் கண்டுள்ளது. கர்த்தாவால் கருவியிலும் கருவியால் கர்த்தாவும் பெருமை பெறும் சிறப்பையும் காண்கின்றோம்.

**“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை”**

ஒரு குறறட்பாவிலே ஒரு சொல்லை பல முறை பயன் படுத்தும் ஆற்றலும்,சிறப்பும் வள்ளுவருக்கே உரியது எனலாம். அது மட்டுமல்லாது “வள்ளுவமாலை” என்ற நூலில் திருக்குறளினதும், வள்ளுவரினதும் சிறப்புகள் 55 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. இன்று மகளிர் தினமாகவும் அமைவதால் அதனோடும் இணைந்து மகளிர் பற்றி திருவள்ளுவரின் சில சிந்தனைகளைப் பகிர்ந்து விடைபெறலாம் என எண்ணுகிறேன்

பொதுவாக திருமணத் தம்பதியினரை வாழ்த்தும் போது வள்ளுவனும் வாசுகியும் போல் வாழ்க என வாழ்த்தும் மரபும் உண்டு இவ்வகையில் வள்ளுவர் காட்டும் இல்லறவியல் என்பது அவரது சொந்த வாழ்வில் அனுபவமே எனக்கருதுவோரும் உளர்

**“ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்”** (குறள்69)

என்றும்

**“தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசார்ந்த சொற்காத்துச் சோர்விலாள் பெண்”** (குறள்56)

ஆகிய குறள்கள் வழி வெளிப்படும் அக்கால சூழலுக்கான பெண் குறித்த வள்ளுவரின் சிந்தனையை முன் வைத்து அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

# நிகழ்வுகளின் தொகுப்பு









நூற்றாண்டு விழாக்கால வீதியோட்ட நிகழ்வுகள் - 2023 ⬆











நூற்றாண்டுகால இல்லமெய்வல்லுனர் போட்டி - 2023 ⬆

# புதன் வாராந்த ஒன்றுகூடல் ~ பதிவுகள்















